பீகார் மேலவை தேர்தல் முதல்வர் நிதிஷ் வேட்பு மனு தாக்கல்

பாட்னா, மார்ச் 6: பீகார் சட்டப்பேரவை மேலவை உறுப்பினர்கள் 11 பேரின் பதவிக்காலம் வருகின்ற மே மாதத்துடன் முடிவடைகின்றது. இதனை தொடர்ந்து மேலவை உறுப்பினர்களுக்கான தேர்தல் வருகிற 21ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்பு மனு தாக்கல் வருகின்ற 11ம் தேதியுடன் முடிவடைகின்றது. மனுக்களை திரும்ப பெறுவதற்கு 14ம் தேதி கடைசி நாளாகும். இந்நிலையில் முதல்வர் நிதிஷ் குமார் நேற்று வேட்பு மனு தாக்கல் செய்தார். தேசிய ஜனநாயக கூட்டணியின் மூத்த தலைவர், துணை முதல்வர் சம்ராட் சவுத்ரி மற்றும் விஜய்குமார் சின்கா உள்ளிட்டோர் அப்போது உடன் இருந்தனர். மேலும் ஐக்கிய ஜனதா தளம் சார்பில் எம்எல்சி காலீத் அன்வரும் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

மல்லையா, நிரவ் மோடி, பிரிஜ் பூஷன் ஆகியோர் மோடி குடும்பத்தில் உள்ளனரா?

காங்கிரஸ் கேள்வி

புவனேஸ்வர், மார்ச் 6: மோடி குடும்பத்தில் மல்லையா, பிரிஜ்பூஷன், நிரவ் மோடி ஆகியோர் உள்ளனரா என்று காங்கிரஸ் கேள்வி எழுப்பி உள்ளது.

பீகார் முன்னாள் முதல்வர் லாலுபிரசாத் யாதவ் பேசும்போது,' பிரதமர் மோடிக்கு குடும்பம் இல்லை' என்று கூறியதை தொடர்ந்து பா.ஜ தலைவர்கள் தங்கள் சமூக ஊடகங்களில் மோடி குடும்பம் என்று பதிவிட்டனர். நாட்டு மக்கள்தான் என் குடும்பம் என்று பிரதமர் மோடியும் பேசினார்.

இது பற்றி நேற்று ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் பவன் கேரா கூறியதாவது: வேலையின்மை காரணமாக இளைஞர்கள் மற்றும் பெண்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். ஒரு மணி நேரத்திற்கு இரண்டு விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கின்றனர். அவர்கள் யாருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்?. இன்று மோடி குடும்பம் என்கிறார்கள். அப்படியானால் மல்யுத்த வீராங்கனைகள் பாலியல் தொந்தவு பிரச்னையில் சிக்கிய பிரிஜ் பூஷன் சரண் சிங், மேற்குவங்கத்தில் பாலியல் குற்றச்சாட்டில் சிக்கிய பவன் சிங், வங்கி பணத்தை கொள்ளையடித்து விட்டு வெளிநாடு தப்பிச் சென்ற நிரவ் மோடி மற்றும் விஜய் மல்லையா ஆகியோரும் மோடி குடும்பத்தை சேர்ந்தவர்களா?. இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

கட்சி தாவல் தடை சட்டத்தின்கீழ் தகுதி நீக்கம்

இமாச்சல் காங். எம்.எல்.ஏக்கள் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு

புதுடெல்லி, மார்ச் 6: இமாச்சலபிரதேச சட்டப்பேரவையில் தகுதி நீக்கம் செய்யப்பட்ட 6 காங்கிரஸ் உறுப்பினர்கள் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளனர்.

இமாச்சலபிரதேசத்தில் மொத்தமுள்ள 68 சட்டப்பேரவை தொகுதிகளில் 40 இடங்களில் வெற்றி பெற்று காங்கிரஸ் ஆட்சி அமைத்துள்ளது. அக்கட்சியில் ஏற்பட்ட உள்கட்சி பூசலால் மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த 6 எம்எல்ஏக்களும், அதே போன்று அரசுக்கு ஆதரவு அளித்து வந்த சுயேட்சை உறுப்பினர்கள் 3 பேரும் எதிர்க்கட்சியான பாஜவின் வேட்பாளருக்கு வாக்களித்தனர்.

இந்த நடவடிக்கையால் பாஜகவை சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் ஹர்ஷ் மகாஜன் மாநிலங்களவை தேர்தலில் வெற்றி பெற்றார்.

இதையடுத்து பாஜகவுக்கு வாக்களித்த 6 காங்கிரஸ் உறுப்பினர்களை கட்சி தாவல் தடை சட்டத்தின்கீழ் தகுதி நீக்கம் செய்து கடந்த வாரம் சபாநாயகர் குல்தீப் சிங் உத்தரவிட்டார்.

இந்நிலையில் தகுதி நீக்கம் செய்யப்பட்ட ஆறு பேரும் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்துள்ளனர்.

அதில், "இந்த விவகாரத்தில் சபாநாயகர் சட்டத்துக்கு புறம்பாக செயல்பட்டுள்ளார். அதனால் அவரது நடவடிக்கைக்கு தடை விதிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். இந்த மனு அடுத்த ஒரிரு நாட்களில் உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவுள்ளது.

▶ ம.பி. மாநிலம் ஷாஜபூர் நகரில் நீதி யாத்திரை மேற்கொண்ட ராகுல் காந்தியை பாஜவினர் கோஷமிட்டு வரவேற்றனர். அவர்களை பார்த்து ராகுல் காந்தி சல்யூட் அடிக்கிறார்.

ம.பி.யில் நீதி யாத்திரை

ராகுலை வரவேற்ற பாஜவினர்

ஷாஜபூர், மார்ச் 6: மத்திய பிரதேசத்தில ராகுலின் நீதி யாத்திரை மேற்கொண்ட ராகுல் காந்தியை பாஜவினர் வரவேற்றனர்.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி மேற்கொண்டு வரும் இந்திய ஒற்றுமை நீதி யாத்திரை பாஜ ஆளும் மத்தியபிரதேச மாநிலத்துக்குள் கடந்த சனிக்கிழமை நுழைந்தது. நேற்று அங்குள்ள ஷாஜபூர் நகருக்குள் யாத்திரை நுழைந்தது. அப்போது அங்கு திரண்டிருந்த பாஜ கட்சியினர் மற்றும் தொண்டர்கள் மோடி, மோடி என கோஷங்களை எழுப்பினர்.

உடனே வாகனத்தை நிறுத்தி விட்டு பாஜ தொண்டர்களை நோக்கி ராகுல் காந்தி சென்றார். அப்போது பாஜவினர் ஜெய்ஸ்ரீராம் என முழக்கமிட்டனர்.

கோஷமெழுப்பிய பாஜவினரிடம் சென்று ராகுல் காந்தி கைக்குலுக்கி, சிறிது நேரம் பேசி விட்டு சென்றார். இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய பாஜ பிரமுகர் முகேஷ் துபே, "ராகுல் காந்தியை நாங்கள் வரவேற்றோம். அவருக்கு உருளைக்கிழங்குகளையும் பரிசாக கொடுத்தோம். ராகுல் காந்தி என்னிடம் பேசியபோது, நாங்கள் அவரை வரவேற்பதாக தெரிவித்தேன்" என்று கூறினார்.

கைக்குலுக்கி, பறக்கும் முத்தம் தந்தார்

அனைத்து துறையிலும் சமூக அநீதி – ராகுல் குற்றச்சாட்டு

ஷாஜபூரில் திறந்த வாகனத்தில் நின்றவாறு பேசிய ராகுல் காந்தி, "நாட்டின் அனைத்து துறைகளிலும் சமூக அநீதி நிலவுகிறது. மக்கள் தொகையில் 90 சதவீதம் உள்ள பிற்படுத்தப்பட்ட, தலித் மற்றும் பழங்குடியினத்தை சேர்ந்த யாரும் எந்த முக்கிய பதவியையும் வகிக்கவில்லை. ஒன்றியத்தில் ஆட்சி செய்யும் பாஜ, மக்களிடையே மதம், சாதி, இனம், மொழியின் அடிப்படையில் பேதம் கற்பித்து சண்டையை ஏற்படுத்துகிறது" என்று கடுமையாக குற்றம்சாட்டினார்.

ராகுலுக்கு சம்மன் – அசாம் முதல்வர்

இதனிடையே கடந்த ஜனவரி மாதம் அசாமின் கவுகாத்தியில் ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமை நீதி யாத்திரையை தடுக்கும் விதமாக காவல்துறையினர் சாலைகளில் தடுப்புகளை வைத்திருந்தனர். அந்த தடுப்புகளை காங்கிரசார் உடைத்து சேதப்படுத்தியதாக கவுகாத்தி போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இதுதொடர்பாக ராகுல் காந்திக்கு சம்மன் அனுப்பப்படும் என அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா கூறியுள்ளார்.

மகாராஷ்டிராவில் பாஜ கூட்டணி பஞ்சாயத்து

விரைந்தார் அமித் ஷா

மும்பை, மார்ச் 6: மகாராஷ்டிரா முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனா, பாஜக (துணை முதல்வர் பட்நாவிஸ்), தேசியவாத காங்கிரஸ் (துணை முதல்வர் அஜித் பவார்) கூட்டணி ஆட்சி மாநிலத்தில் நடக்கிறது. லோக்சபா தேர்தல் தொகுதி பங்கீடு தொடர்பாக மூன்று கட்சிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. ஆனால் கூட்டணிக்குள் தொகுதி பங்கீடு தொடர்பாக பிரச்னை ஏற்பட்டுள்ளது. மொத்தம் 10 தொகுதிகளை ஒன்றுக்கும் மேற்பட்ட கட்சிகள் தங்களுக்கு தான் வேண்டும் என்று கேட்பதுதான் பிரச்னைக்கு காரணம்.

அந்த பஞ்சாயத்தை தீர்ப்பதற்காக ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா மகாராஷ்டிரா வந்துள்ளார். இதுகுறித்து பாஜக மூத்த தலைவர்கள் கூறுகையில், 'வரவிருக்கும் மக்களவைத் தேர்தலுக்கான 195 வேட்பாளர்களின் முதல் பட்டியலை பாஜக வெளியிட்டது. ஆனால், இந்த பட்டியலில் மகாராஷ்டிராவை சேர்ந்த எவரும் இடம்பெறவில்லை. தேர்தல் பேரணியில் பங்கேற்பதற்காக அமித் ஷா வந்துள்ளார். தேர்தல் அட்டவணை வெளியாகும் முன், கூட்டணி தொகுதி பங்கீட்டை அவர் தீர்ப்பார்' என்றனர்.

மபியில் காங்கிரசுக்கு 13 தொகுதியில் வெற்றி உறுதி

கமல்நாத் பேட்டி

போபால், மார்ச் 6: மபி காங்கிரஸ் பட்டியல் இன்று வெளியாகும் என்று கமல்நாத் தெரிவித்தார்.

மபி காங்கிரஸ் மூத்த தலைவர் கமல்நாத் நேற்று உஜ்ஜைனியில் நடந்த ராகுல் யாத்திரையில் இணைந்தார். அப்போது அவர் கூறியதாவது: 2019 மக்களவை தேர்தலில் மத்தியபிரதேசத்தில் உள்ள 29 தொகுதிகளில் 28 தொகுதியை பா.ஜ கைப்பற்றியது. இந்த முறை காங்கிரஸ் கட்சி குறைந்தது 12 முதல் 13 தொகுதிகளை கைப்பற்றும்.

இன்று காங்கிரஸ் கட்சியின் மத்திய தேர்தல் குழு வேட்பாளர்கள் பட்டியல் குறித்து பரிசீலனை செய்கிறது. மபியில் போட்டியிட உள்ள 15 முதல் 20 வேட்பாளர்கள் அதன்பின் அறிவிக்கப்பட வாய்ப்பு உள்ளது. நான் பாஜவுக்கு போவதாக நீங்கள் (ஊடகங்கள்) தான் செய்திகளை பரப்பிவிட்டீர்கள். எல்லோரும் என்னிடம் கேள்விகள் கேட்கிறீர்கள். எனது மகன் நகுல்நாத் மீண்டும் சிந்த்வாரா மக்களவை தொகுதியில் போட்டியிடுவார். இவ்வாறு தெரிவித்தார்.

வட கிழக்கு இரயில்வே — **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

இணையதளம்: www.ner.indianrailways.gov.in மின்னஞ்சல்: cos@ner.railnet.gov.in

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 23 நாள் 04.03.2024

மின்-கொள்முதல் முறை மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்பு

முதன்மை தலைமை சரக்கு மேலாளர், வடகிழக்கு இரயில்வே, கோரக்பூர் அவர்கள், மற்றும் இந்திய குடியரசுத் தலைவர் சார்பாக, பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக மின்–கொள்முதல் முறை மூலம் ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார். பொருளின் முழு விவரம் மற்றும் பிற நிபந்தனைகள் www.ireps.gov.in இணையதளத்தில் கிடைக்கப்பெறும்.

வரிசை எண்	ஒப்பந்தப்புள்ளி எண்	தவணை நாள்	சரக்குகளின் குறு விவரம்	கொள்முதல் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டோர்
1	33241060	17/04/24	கேட்மியம் மின்கடத்தும் செம்பு உள்ளிட்டவை	CORE
2	33231088B	10/04/24	இணைப்புகளற்ற நிலையான செம்பு உள்ளிட்டவை	CORE
3	28230804	08/04/24	செறிவூட்டப்பட்ட மர வகையிலான பிசின் உள்ளிட்டவை	ICF
4	33241002	03/04/24	போர்செலைன் பிராக்கெட் இன்சுலேட்டர் உள்ளிட்டவை	CORE
5	24245008	29/03/24	முழுவடிவிலான காந்தச் சட்டம் உள்ளிட்டவை	CLW
6	24235020	29/03/24	இழுவை மோட்டார் வகை: HS-15250A உள்ளிட்டவை	CLW
7	29235107	27/03/24	UFSBI உள்ளிட்டவற்றுக்கான விநியோகம்	RDSO
8	24231427A	25/03/24	மோட்டாரை நிறுத்திவைக்கக்கூடிய அலகின் வரிசை உள்ளிட்டவை	CLW
9	24241130	25/03/24	நகல் எடுப்பதற்கான IOH உபகரணம் உள்ளிட்டவை	CLW
10	29235159B	21/03/24	SMPS சார்ந்த IPS அமைப்பு உள்ளிட்டவை	RDSO

CPRO/S-140 முதன்மை தலைமை சரக்கு மேலாளர், வட கிழக்கு இரயில்வே, கோரக்பூர்

"கூரை மற்றும் படியில் ஒருபோதும் பயணம் செய்யாதீர்"

ஐதராபாத் காஜிப்பேட்டை ரயில் நிலையத்தில்

ரயில் பெட்டிகளில் திடீர் தீ விபத்து

பயணிகள் அலறியடித்து ஓட்டம்

திருமலை, மார்ச் 6: ஐதராபாத் காஜிப்பேட்டை ரயில் நிலையத்தில் பிளாட்பாரம் அருகில் காலியாக நின்றிருந்த ரயில் பெட்டிகளில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

தெலங்கானா மாநிலம் ஐதராபாத் காஜிப்பேட்டை ரயில் நிலையத்தில் நேற்று ரயில் பெட்டிகளில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. சில நொடிகளில் தீ மளமளவென பரவி அதன் அருகில் நிறுத்தப்பட்டிருந்த பயணிகள் ரயில் பெட்டிகளில் தீப்பிடித்தது.

இதனை பார்த்து பீதியடைந்த பயணிகள் ரயில் நிலையத்தை விட்டு அலறியடித்து கொண்டு வெளியே ஓடி வந்தனர். இதுகுறித்த தகவல் கிடைத்ததும் தீயணைப்பு வீரர்கள் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்து தீயை அணைத்தனர்.

இதுகுறித்து ரயில்வே போலீசார் கூறுகையில், 'ரயில் நிலையத்தில் நடைமேடைக்கு அருகில் காலியாக பெட்டிகள் நிறுத்தி வைக்கும் இடத்தில் தீ விபத்து ஏற்பட்டது. சரக்கு ரயிலில் இருந்த நிலக்கரி தீப்பிடித்ததால் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. காலியாக இருந்த ரயில் பெட்டியில் தீ விபத்து ஏற்பட்டதால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது' என்றனர்.

ப்ளே ஸ்டோரில் இருந்து

நீக்கப்பட்ட இந்திய ஆப்களை மீண்டும் சேர்க்க கூகுள் ஒப்புதல்

புதுடெல்லி, மார்ச் 6: ப்ளே ஸ்டோரில் உள்ள ஆப்கள் மூலம் தொழிலில் ஆதாயம் பெறும் இந்திய நிறுவனங்கள் 11 முதல் 26 சதவீத சேவைக் கட்டணம் செலுத்த கூகுள் நிறுவனம் வலியுறுத்தியது. இந்நிலையில் தங்களது கட்டண கொள்கைக்கு இணங்கவில்லை எனக்கூறி கடந்த வாரம் தனது ப்ளே ஸ்டோரில் இருந்து சில முன்னணி இந்திய நிறுவனங்களின் ஆப்களை கூகுள் நீக்கியது. இந்த விவகாரம் தொடர்பாக ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தின. இதனை தொடர்ந்து ப்ளே ஸ்டோரில் இருந்து நீக்கப்பட்ட இந்திய நிறுவனங்களின் ஆப்களை மீண்டும் கொண்டுவருவதற்கு கூகுள் ஒப்புக்கொண்டுள்ளது. இது குறித்து ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறுகையில், "சர்ச்சைக்குரிய கட்டண சிக்கலுக்கு தீர்வு காணப்படும் என்று நம்புகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

கொல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதி அபிஜித் ராஜினாமா

பாஜவில் இணைவதாக அறிவிப்பு

கொல்கத்தா, மார்ச் 6: மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதி அபிஜித் கங்கோபாத்யாய். இவர் நேற்று காலை உயர்நீதிமன்றத்தில் உள்ள தனது அறைக்கு வந்தார். பின்னர் தனது ராஜினாமா கடிதத்தை . குடியரசு தலைவர் திரவுபதி முர்மூவுக்கு அனுப்பி வைத்தார். மேலும் அதன் நகல்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திர சூட், கொல்கத்தா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி டிஎஸ் சிவஞானம் ஆகியோருக்கும் அனுப்பி வைத்தார்.

இதனை தொடர்ந்து பிற்பகல் செய்தியாளர்களை சந்தித்த அபிஜித் கங்கோபாத்யாய், ''திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் ஊழலுக்கு எதிராக போராடும் தேசிய கட்சி என்பதால் நான் பாஜவில் சேருகிறேன். மார்ச் 7ம் தேதி பாஜவில் இணைகிறேன்" என்றார்.

அரசு அனுமதியின்றி

இடங்களின் பெயரை மாற்றினால் 3 ஆண்டு சிறை

மணிப்பூர் சட்டப்பேரவையில் மசோதா நிறைவேற்றம்

இம்பால், மார்ச் 6: மணிப்பூர் சட்டப்பேரவையில் முதல்வர் பைரன் சிங், "மணிப்பூர் இடங்களின் பெயர்கள் 2024 மசோதா" என்ற மசோதாவை முன்மொழிந்தார். அப்போது பேசிய முதல்வர், "மணிப்பூர் மாநில அரசு நமது வரலாறு, கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் முன்னோர்கள் கடந்து வந்த பாரம்பரியத்தை பாதுகாப்பதில் தீவிரம் காட்டி வருகின்றது. ஒப்புதல் இல்லாமல் இடங்களின் பெயர்களை மாற்றுவது, தவறாக பயன்படுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறு ஈடுபடுபவர்களுக்கு சட்டரீதியாக கடுமையான தண்டனை வழங்கப்படும்" என்றார். பின்னர் இந்த மசோதா ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. புதிய மசோதாவின்படி, அரசின் ஒப்புதல் இல்லாமல் கிராமங்கள், இடங்களின் பெயர்களை மாற்றுபவருக்கு அதிகபட்சமாக 3 ஆண்டு சிறை தண்டனை, ரூ.3லட்சம் அபராதம் விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

தெற்கு ரயில்வே

மதுரை கோட்டம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: U-E-OT-2024-02

தேதி 04.03.2024

முதுநிலை கோட்ட எலக்ட்ரிக்கல் பொறியாளர்/ பொது சேவை/ மதுரை அவர்கள், இந்திய ஒன்றியத்தின் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும், பின்வரும் பணிகளுக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளியை வரவேற்கிறார்.

தகுதியுள்ள ஒப்பந்தப்புள்ளியாளர்கள்/ ஒப்பந்ததாரர்கள் தங்களது விலைகூறல்களை ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் நேரமான **18.03.2024** அன்று **15:00** மணி வரை ஆன்லைனில் சமர்ப்பிக்கலாம். காகிதவடிவ விலைகூறல்களை சமர்ப்பிப்பதற்கு அனுமதி இல்லை, அவை ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் நேரத்திற்குள் சமர்ப்பிக்கப்பட்டாலும் நிராகரிக்கப்பட்டுவிடும்.

வ எண்	ஒப்பந்தப்புள்ளி எண் & பணியின் பெயர்	தோராயமான ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (₹)	பிணை வைப்புத் தொகை (₹)
1	ஒப்பந்தப்புள்ளி எண். U-E-OT-2024-02-01 MDU கோட்டம்: அம்ரித் பாரத் நிலைய திட்டத்தின் கீழ் விருதுநகர் நிலையத்தில் மேம்பாட்டு பணிகள் - எலக்ட்ரிக்கல் மின்சார விநியோகம் மற்றும் லைட்டிங் ஏற்பாடுகள்	₹ 77,96,770/-	₹ 1,55,900/-
2	ஒப்பந்தப்புள்ளி எண். U-E-OT-2024-02-02 MDU கோட்டம்: அம்ரித் பாரத் நிலைய திட்டத்தின் கீழ் காரைக்குடி நிலையத்தில் மேம்பாட்டு பணிகள் - எலக்ட்ரிக்கல் மின்சார விநியோகம் மற்றும் லைட்டிங் ஏற்பாடுகள்	₹ 75,90,694/-	₹ 1,51,800/-

பணி நிறைவடையும் காலம் : வ. எண் 1 & 2: 3 மாதங்கள்

மூடப்படும் நேரமும் தேதியும்: வ. எண் 1 & 2: 18.03.2024 அன்று 15:00 மணி

குறிப்பு: 1. மின்னணு-ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்பதற்கு, ஏற்கனவே பதிவு செய்யவில்லை என்றால், தகுதியுள்ள ஒப்பந்தப்புள்ளியாளர்கள்/ ஒப்பந்ததாரர்கள் தங்களை IREPS (இந்திய ரயில்வே மின்னணு கொள்முதல் அமைப்பு) இல் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள், IREPS தளத்தில் பதிவு படிவம் கிடைக்கும் (விரைவு இணைப்பு புதிய விற்பனையாளர்கள்/ ஒப்பந்ததாரர்கள் (மின்னணு-ஒப்பந்தப்புள்ளி) **2.** மின்னணு-ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்பதற்கும் IREPS இணையதளத்தில் உள்நுழைவதற்கும், ஒப்பந்ததாரர்கள்/ ஒப்பப்புள்ளியாளர்கள் வகுப்பு iii டிஜிட்டல் கையொப்பமிட்ட சான்றிதழையோ (DSC) அல்லது அங்கீகரிக்கப்பட்ட சான்றளிக்கும் அதிகாரத்தால் (CCA- சான்றளிக்கும் அதிகாரத்தின் கட்டுப்பாட்டாளர்) அங்கீகரிக்கப்பட்ட வேறு சான்றிதழையோ இந்திய அரசிடம் இருந்து பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **3.** ஒப்பந்ததாரர்கள்/ ஒப்பப்புள்ளியாளர்கள் பிணை வைப்புத் தொகையை செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பிணை வைப்புத் தொகை மின்னணு பேமெண்ட் கேட்வே மூலம் ரொக்கமாகவோ அல்லது இந்தியாவின் திட்டமிடப்பட்ட வணிக வங்கியிடமிருந்து வங்கி உத்தரவாதப் பத்திரமாகவோ அல்லது ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறையிலோ செலுத்தப்பட வேண்டும். பிணை வைப்புத் தொகை இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும். **4.** மேலே உள்ள அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி ஆவணக் கட்டணம் கிடையாது.

விவரங்களுக்கு ஆர்வமுள்ள நபர்கள் **http://www.ireps.gov.in** என்ற இணையதளத்தை பார்க்கலாம். பிற விவரங்கள், கட்டணங்கள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றை அறிய பதிவேற்றப்பட்ட ஆவணங்களை பார்க்குமாறு ஒப்பந்தப்புள்ளியாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள், அனைத்து பிற்சேர்க்கை/ பிழைத்திருத்தம், கால நீட்டிப்பு, ஐயப்பாடு தீர்த்தல் போன்றவை இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும், தனியாக நாளிதழ்களில் வெளியிடப்படாது. ஒப்பப்புள்ளியாளர்கள் அவ்வப்போது இணையதளத்தை பார்த்து அண்மை நிலவரங்களை தெரிந்து கொள்ள வேண்டும்.

முதுநிலை கோட்ட எலக்ட்ரிக்கல் பொறியாளர்/OP, மதுரை - 16

Follow us on: twitter.com/GMSRailway

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904

கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை

நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் – 612 001. **மின்னஞ்சல் :** crmd@cityunionbank.in

போன் : 0435-2432322, **ஃபேக்ஸ் :** 0435-2431746

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல்/நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002ன் படி டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அறிவிப்பு

சிட்டி யூனியன் வங்கியின் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களாகிய **(1) திரு. A.K. நரேஷ் குமார், த/பெ. A.M. காமராஜ், எண்.E-17, E–பிளாக், MMDA காலனி, மகாத்மா காந்தி 1வது தெரு, அரும்பாக்கம், சென்னை – 600106. (2) திரு. A.M. காமராஜ், த/பெ. A.M. முனுசாமி, எண்.E-17, E–பிளாக், MMDA காலனி, மகாத்மா காந்தி 1வது தெரு, அரும்பாக்கம், சென்னை – 600106. (3) திருமதி K. மஞ்சுளா, க/பெ. A.M. காமராஜ், எண்.E-17, E–பிளாக், MMDA காலனி, மகாத்மா காந்தி 1வது தெரு, அரும்பாக்கம், சென்னை – 600106** ஆகியோர் பெற்ற கடன் நிலுவைத் தொகை **03-03-2024** அன்றுள்ளபடி **ரூ. 7,27,257/- (ரூபாய் ஏழு லட்சத்து இருபத்து ஏழாயிரத்து இருநூற்று ஐம்பத்து ஏழு மட்டும்)** மற்றும் **04-03-2024** முதல் பின்வட்டி மற்றும் வங்கிக்கு சேரவேண்டிய வேறு ஏதேனும் பாக்கிகள், இதர செலவுகள் ஆகிய மொத்த தொகையை வசூலிக்கும் பொருட்டு வங்கியில் அடமானம் வைக்கப் பட்டுள்ள கீழ்க்கண்ட சொத்து 2002ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம். விதி 8(6)&9-ன் கீழ் சிட்டி யூனியன் வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரி அவர்களால் சீலிடப்பட்ட டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அடிப்படையில் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு: எங்களது **467-அரும்பாக்கம் கிளை,** உங்களில் எண்.2 கொண்டவரது வேண்டுகோளின் பேரிலும், உங்களில் எண். 3 கொண்டவர் உடன்-கடனாளியாகவும், விளங்குவதால், (CUB OSL TERM EMI-BR : 501812080049808)-ன் கீழ் **13.75%** வட்டி விகிதத்தில் **09-04-2019** அன்று **ரூ.15,00,000/-** நீட்டிப்பு நிதி உதவி வழங்கியுள்ளது. மற்றும் **03-03-2024** அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையானது **ரூ.9,55,893/- (ரூபாய் ஒன்பது லட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்)** மற்றும் முழு கடன் தொகையையும் திருப்பிச் செலுத்தும் தேதி வரை **04-03-2024** முதல் மேற்கொண்டு மாத இருப்புக்கான வட்டியும்; கூடுதல் அபராத வட்டி **2%** மாதாந்திர வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும்.

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்தின் விவரம் (A.M. முனுசாமி மகன் A.M. காமராஜ்-க்கு சொந்தமான சொத்து)

சென்னை மாவட்டம், அமைந்தகரை தாலூகா, அரும்பாக்கம் கிராமம் மற்றும் அரும்பாக்கத்தில் C-டைப், T.S. எண்.5, பிளாக் எண்.22, மனை எண்-E-17, சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-I, அனுமதிக்கப்பட்ட திட்டத்தில் உள்ள நிலம் மற்றும் கட்டிடம், 500 சதுர அடி அல்லது அதைச் சுற்றி உள்ளது. எல்லைகள் : வடக்கில் - பிளாட் எண்.18, தெற்கில் - பிளாட் எண்.16, கிழக்கில் - 10 அடி அகலமான ரோடு, மேற்கில் - பிளாட் எண்.28. அளவுகள் : கிழக்கு-மேற்காக வடக்கு பக்கம் - 50 அடி, கிழக்கு-மேற்காக தெற்கு பக்கம் - 50 அடி, வடக்கு-தெற்காக கிழக்கு பக்கம் - 10 அடி, வடக்கு-தெற்காக மேற்கு பக்கம் - 10 அடி. அனைத்து அளவுகளும் 500 சதுர அடி அல்லது அதற்கு அடுத்தபடியாக 1,300 சதுர அடி பரப்பளவில். தென் சென்னை பதிவு மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள, தரை தளம், முதல் தளம் & இரண்டாவது தளம் அமைந்துள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ. 34,00,000/- (ரூபாய் முப்பத்து நான்கு லட்சம் மட்டும்)

டெண்டருடன் கூடிய ஏல விற்பனை விவரம்

டெண்டருடன் கூடிய ஏல விற்பனை தேதி : 16-04-2024

இடம் : சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், அரும்பாக்கம் கிளை, எண்.CP-24, ரசாக் கார்டன் தெரு, MMDA காலனி, அரும்பாக்கம், சென்னை – 600106. தொலைபேசி எண். 044-23630063, செல் எண். 9345012129.

டெண்டருடன் கூடிய ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :

(1) விருப்பமுடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் ஏலத்தில் பங்கு கொள்ள நேரில் ஆஜராக வேண்டும் மற்றும் தனக்காகவே ஏலம் கேட்பதாக எழுத்துபூர்வமான ஒரு உறுதிமொழியினையும் அளிக்க வேண்டும். (2) விருப்பமுடைய டெண்டர்தாரர்/ஏலம் கேட்க விரும்புவோர், டெண்டர் படிவங்களை **மேனேஜர், சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், அரும்பாக்கம் கிளை, எண்.CP-24, ரசாக் கார்டன் தெரு, MMDA காலனி, அரும்பாக்கம், சென்னை – 600106ல்** பெற்றுக் கொள்ளலாம். (3) விருப்பமுடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் தங்களது விலைப்புள்ளிகளை நிர்